

தென்காசி சிந்தாமணியில் வசித்து வரும் கழக முன்னோடி ஈஸ்வரன் அவர்களின் மகனும்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜாவின் அண்ணன் தென்காசி 31 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஈ.பாலமுருகன் (வயது 43) கடந்த 03.10.2026 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.அன்னாரது இல்லத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி.அவர்கள் நேரில் சென்று மறைந்த ஈ.பாலமுருகன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.அதனைத் தொடர்ந்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. நகர செயலாளர் சாதிர் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

பட்டினப்பாக்கத்தில்

புதிய தலைமைச் செயலகத்திற்கான நிலத்தை வணிகப் பயன்பாட்டுக்கு மாற்ற சி.எம்.டி.ஏ. அனுமதி!

த.வெ.க. அரசு உறுதியாக இருப்பதால் மீனவர்கள் கலக்கம்!

சென்னை, அக். 8 - சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க உள்ள நிலத்தின் வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பட்டினப்பாக்கத்தில் வீட்டுவசதி வாரியத்தின் 21.37 ஏக்கர் நிலத்தில் தலைமைச் செயலகம் கட்ட தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது. இந்நிலையில், குடியிருப்புப் பகுதியில் இருந்து வணிகப் பயன்பாடு மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் (CMDA) மாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிலத்தை வணிக பயன்பாடு மண்டலமாக மாற்ற சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்துக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் விண்ணப்பித்திருந்தது. விண்ணப்பத்தை பரிசீலனை செய்த சி.எம்.டி.ஏ. வணிக பயன்பாட்டு மண்டலமாக மாற்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அப்பகுதியில் அமைந்திருந்த முதன்மை குடியிருப்பு பயன்பாட்டு மண்டலம், நிறுவன பயன்பாட்டு மண்டலம், திறந்த வெளி மற்றும் பொழுது போக்கு பயன்பாட்டு மண்டலம், மேலும் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படாத மண்டலம் எனப் பல பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டிருந்த நிலங்கள் அனைத்தும், தற்போது 'வணிக பயன்பாட்டு மண்டலமாக' மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்கு நிலத்தின் பயன்பாட்டுத் தன்மையை மாற்றுவது மிக முக்கிய முதல் நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது. சி.எம்.டி.ஏ. அளித்துள்ள இந்த அனுமதியைத் தொடர்ந்து, நிலப் பயன்பாட்டை மாற்றுவதற்கான முதன்மை நிர்வாக நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இது புதிய தலைமைச் செயலகப் பணிகளை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான முக்கியத் திருப்பமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் தற்பொழுது அந்த நிலத்தின் வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் வெளியிட்டுள்ள

புதிய குளிர்கால விமான சேவைகள் அட்டவணையில் சென்னை புறக்கணிப்பு!

சென்னை, அக்.8 - ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் தனது குளிர்கால விமான சேவைகளுக்கான புதிய கால அட்டவணையை, வரும் 25ம் தேதி முதல் இயக்க தொடங்குகிறது. ஏற்கனவே நாடு முழுவதும் கோடை காலங்களில் 3,150 விமான சேவைகளை இயக்கி வந்தது.

இப்போது குளிர் காலங்களில் 4,100 விமான சேவைகளாக, அதிகரிக்கப்பட்டுள்ளது. அதோடு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் இணைப்பு விமானங்கள், வாரத்திற்கு 1,330 விமான சேவைகளாக இருந்தது, தற்போது வாரத்திற்கு 1,600 விமான இணைப்பு சேவைகளாக, அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தமிழ்நாட்டுக்கு குறிப்பாக சென்னைக்கு, பெரும் ஏமாற்றமான நிலையைதான் உருவாக்கி உள்ளது.

சென்னை விமான நிலையத்தில் இருந்து ஏற்கனவே, துபாய், சார்ஜா, தமாம், சிங்கப்பூர், கோலாலம்பூர், இலங்கை, மாலத்தீவு உள்ளிட்ட பல இடங்களுக்கு, ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்களின் விமான சேவைகள், இயக்கப்பட்டு வந்தன. அந்த சேவைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு, முழுவதுமாக நிறுத்தப்பட்டு விட்டது.

அதைப்போல் உள் நாட்டு விமான சேவைகளின் ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள், சென்னையில் இருந்து அந்தமான், ஐதராபாத், திருவனந்தபுரம், மதுரை, திருச்சி, கோவை உள்ளிட்ட விமான நிலையங்களுக்கு, விமான சேவைகளை இயக்கி வந்தன. அவைகள் நிறுத்தப்பட்டு விட்டன.

தமிழ்நாட்டு பயணிகளுக்கு ஏமாற்றம்!

இந்நிலையில் தற்போதைய குளிர் கால புதிய அட்டவணையில், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம், ஏற்கனவே இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்டுள்ள ஏர் இந்தியா, எக்ஸ்பிரஸ் சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான வழித்தடங்களில், மீண்டும் புதிதாக ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் விமான சேவைகளை தொடங்கும் என்று, பயணிகள் வெகுவாக எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் அந்த அட்டவணையில் தமிழ்நாட்டு விமான பயணிகளுக்கு ஏமாற்றமே ஏற்பட்டுள்ளது.

சென்னை சிங்கப்பூர் சென்னை இடையே, தினசரி விமானங்களாக இயக்கப்பட்டு வந்த, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான சேவைகள், கடந்த 3 மாதங்களாக நிறுத்தப்பட்டு விட்டன. இப்போது வருகிற 25ம் தேதி முதல், சென்னை சிங்கப்பூர் சென்னை இடையே, தினசரி விமானங்களாக, வாரத்துக்கு 14 விமான சேவைகளை புதிதாக இயக்குகிறது. இந்த விமானம், சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, தினமும் அதிகாலை 2.05 மணிக்கு சிங்கப்பூர் புறப்பட்டு செல்கிறது. அதைப்போல் சிங்கப்பூரில் இருந்து, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் புறப்பட்டு, தினமும் இரவு 8 மணிக்கு, சர்வதேச விமான நிலையம் வந்து சேர்கிறது.

இந்த சிங்கப்பூர் புதிய விமான சேவை தவிர, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சென்னை துபாய், இலங்கை, கோலாலம்பூர், தமாம், சார்ஜா, மாலத்தீவு உள்ளிட்ட விமான சேவைகள் எதுவும் மீண்டும் தொடங்கவில்லை.

அதைப்போல் சென்னையில் இருந்து உள் நாட்டு விமானங்களான அந்தமான், ஐதராபாத், திருவனந்தபுரம், திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்களுக்கான விமான சேவைகள் மீண்டும் தொடங்கவில்லை.

ஆனால் பெங்களூர் கோவை இடையே, வாரத்திற்கு 14 புதிய விமான சேவைகளையும், பெங்களூர் மதுரை இடையே, வாரத்திற்கு 7 விமான சேவைகளையும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் வரும் 25ம் தேதியில் இருந்து, புதிதாக தொடங்குகிறது.

இவைகள் தவிர பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அந்தமான், ஐதராபாத், திருச்சி, கோவை, மதுரை விமான நிலையங்களுக்கு, சென்னையில் இருந்து புதிய விமானங்கள் எதுவும் இயக்கப்படவில்லை. ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனங்கள் தொடர்ந்து, தமிழ் நாட்டை, குறிப்பாக சென்னையை விமான சேவைகள் இயக்குவதில், புறக்கணித்து வருவதாக, பயணிகள் தரப்பில் கூறுகின்றனர்.

அடப்பாவமே!



ஒரு இடைத்தேர்தலுக்காக முருங்கைக்காய் புடுங்க வேண்டிய நிலைக்கு ஆளானதே நம்ம கேரியர் உச்சத்துக்கு

தோல்வி தான்...

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்





சென்னை மீனம்பாக்கத்தில் அமைந்துள்ள அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் "யுவஉற்சவம் என்ற தலைப்பில் கல்லூரி மாணவ, மாணவியர்க்கான கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் எம்.அனந்த நாராயணன், துணை முதல்வர் முனைவர் ஆர். இளங்கோவன் முன்னிலையில் சிறப்பு விருந்தினராக கழக தென் சென்னை மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் திரைப்பட நடிகர் வழக்கறிஞர் தமிழ்வேல் மற்றும் திரைப்பட நடிகை "ரேகாகுமார் "கலந்து கொண்டு விழாவை துவக்கி வைத்தனர். கல்லூரி நிர்வாக கமிட்டி உறுப்பினர் பாவனேஷ் தியோதா மற்றும் ராம் குமார் சிறப்பு விருந்தினர்களை கௌரவித்தனர். அனைத்து துறை பேராசிரியர்கள் பங்கேற்க மாணவ மாணவியர் கலை நிகழ்ச்சிகள் இனிதே நடைபெற்றது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(05.10.2026)



1. திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வாகைகுளத்தில் முன் விரோதம் காரணமாக தச்சுத் தொழிலாளி வெட்டிக்கொலை .

2. நாகை மாவட்டம் கீழ்வேளூரை அடுத்த கூத்தூரில் நகைக்காக மூதாட்டி கொலை .

3. நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் வட மாநில தொழிலாளர்கள் இடையே மோதல் ஒருவர் கொலை.

4. சென்னை வேளச்சேரியில் இருந்து நண்பர்களை பார்க்க மயிலாப்பூருக்கு வந்த ஏசி மெக்கானிக் நடுரோட்டில் சரமாரியாக வெட்டிக்கொலை .

5. சேலம் மாவட்டம் ஓமலூர் அடுத்த வெள்ளாளப்பட்டியில் த.வெ.க. பிரமுகர் பட்டப் பகலில் கழுத்தை அறுத்து கொடூர கொலை .

6. ஈரோடு மாவட்டம் நம்பியூர் வட்டம் லாகம்பாளையத்தில் ஆடு மேய்க்கச் சென்ற பெண் காட்டுப்பகுதியில் அடித்துக் கொலை.



7. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே +2 மாணவியை கடத்திச் சென்று , மது கொடுத்து வன்கொடுமை செய்த மூன்று பேர் சிக்கினார்கள் .

8. விளாத்திகுளத்தில் தவெக பெண் நிர்வாகியை அடித்து துன்புறுத்திய, த.வெ.க. நிர்வாகி மீது போலீசில் புகார்.

9. திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகே சைக்கிளில் பள்ளிக்குச் சென்ற 10ம் வகுப்பு மாணவியை வழிமறித்து கத்தியால் வெட்டிய . முகமுடி ஆசாமிகள்.

10. திருநெல்வேலி மாவட்டம் அகஸ்தியர் புரம் அருகே எட்டாம் வகுப்பு மாணவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த போலீஸ் ஏட்டு சிக்கினார் .

11. தேனி அருகே ஒன்பது வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த 16 வயது சிறுவன் சிக்கினான்.



12. சென்னை பெரம்பூர் அருகே ஐடி நிறுவன ஊழியர் வீட்டு பீரோவை உடைத்து ஒன்பதரை லட்ச ரூபாய் பணம், 8 சவரன் நகை கொள்ளை .

13. நாகர்கோவில் அருகே தம்மத்து கோணத்தில் காண்ட்ராக்டர்க்கு மசாஜ் செய்வது போல் நடித்து செயின் பறித்த பிரபல பெண் youtuber சிக்கினார் .

14. மாதவரம் பால் பண்ணை அருகே டீக்கடைக்குள் நுழைந்து கத்தியை காட்டி மிரட்டி. கல்லாப்பெட்டியில் இருந்து 5000 ரூபாய் பணம் கொள்ளை .

15. சென்னை வியாசர்பாடி சாஸ்திரி நகரில் மது அருந்திய வாலிபர்களிடம் கத்தி முனையில் 3 சவரன் ஜெயின் மற்றும் பணத்தை பறித்த த.வெ.க. வட்ட செயலாளர் தலைமறைவு .



16. சென்னை துரைப்பாக்கம் பெருங்குடி அருகே நடந்து சென்ற வெல்டிங் தொழிலாளியை வழிமறித்து கத்தி முனையில் 9.500 ரூபாய் பணம் பறிப்பு .

17. சென்னை ஆதம்பாக்கம் அம்பேத்கர் நகரில் கடைகளில் கத்தியை காட்டி மிரட்டி மாமுல் வசூலித்த ரவுடி, பொது மக்கள் அச்சம்.

18. சென்னை கோடம்பாக்கம் டிரஸ்ட் புரத்தில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில் இரண்டு வாலிபர்களுக்கு சராமாரியாக கத்தி குத்து .

19. சென்னை கொடுங்கையூர் முத்தமிழ் நகரில் குடிநீர் லாரி டிரைவருக்கு அரிவாள் வெட்டு .

20. தஞ்சாவூர் மாவட்டம் கபிஸ்தலம் அருகே கள்ளத்தனமாக நாட்டு வெடிகுண்டு தயாரிப்பு .

21. சென்னை எண்ணூர் மற்றும் வியாசர்பாடி, சோழிங்கநல்லூரில் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா ஆகியவை விற்பனை .



22. பெரம்பூரில் உள்ள செல்போன் கடைகளில் த.வெ.க நிர்வாகி வினித் மாமூல் கேட்டு மிரட்டல் , மாமூல் தர மறுக்கும் கடை உரிமையாளர்கள் மீது ரவுடிகளுடன் சென்று த.வெ.க.வினர் கொலைவெறித் தாக்குதல். த.வெ.க.வினர் தாக்குதலை காயமடைந்த செல்போன் கடைக்காரர் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதி. விஜயின் சொந்த தொகுதியிலேயே த.வெ.க.வினர் அட்டகாசத்தில் ஈடுபட்டு வருவதால் பொதுமக்களும் வியாபாரிகளும் கடும் அவதி.

23. சென்னை: மைலாப்பூரில் சத்தியசீலன் (19) என்ற இளைஞர் வெட்டி கொலை செய்த மர்ம கும்பல்! நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது பைக்கில் வந்து சீலனின் தொண்டை, தலை, கை உள்ளிட்ட பகுதிகளில் வெட்டி உள்ளனர். மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு.